பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 659 **நாள்:** 09.11.2026

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், தீபாவளி பண்டிகையின்போது உருவாகும் பட்டாசுக் கழிவுகளைப் பொதுமக்கள் தனியாகப் பிரித்து, அதற்கென வழங்கப்பட்டுள்ள தனிப்பைகளில் சேகரித்து, தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு ஏற்கனவே கேட்டுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், பொதுமக்களிடையே இதற்கான ஒத்துழைப்பு எதிர்பார்த்த அளவிற்கு இல்லை.

இதுவரை சென்னை மாநகரம் முழுவதும் இதுவரை சுமார் 200 மெட்ரிக் டன் பட்டாசுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன. மேலும், வரும் நாட்களில் சுமார் 450 மெட்ரிக் டன் பட்டாசுக் கழிவுகளை அகற்ற மாநகராட்சி இலக்கு நிர்ணயித்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேலும், மழையின் காரணமாக பட்டாசுக் கழிவுகள் சாலைகளில் ஒட்டிக்கொண்டு இருப்பதால், அவற்றை அகற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் தொடர்ந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டு, சாலைகளில் தேங்கியுள்ள பட்டாசுக் கழிவுகளை அகற்றும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பட்டாசுக் கழிவுகளை விரைந்து அகற்றும் பணிக்காக, கூடுதலாக 600 துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் 350 வாகனங்கள் மாநகரின் பல்வேறு பகுதிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், பட்டாசுக் கழிவுகளைத் தனியாகச் சேகரிப்பதற்காகத் துப்புரவுப் பணியாளர்களுக்கு 30,000 எண்ணிக்கையிலான 50 கிலோ கொள்ளவு கொண்ட சேகரிப்புப் பைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சேகரிக்கப்படும் பட்டாசுக் கழிவுகள், அறிவியல் பூர்வமான மற்றும் பாதுகாப்பான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்காக கும்மிடிப்பூண்டியில் உள்ள பிரத்யேக செயலாக்க மையத்திற்கு எடுத்துச் செல்லப்பட உள்ளன.

எனவே, பொதுமக்கள் பட்டாசுக் கழிவுகளைத் தனியாகப் பிரித்து, தங்களது பகுதிகளுக்கு வரும் பெருநகர சென்னை மாநகராட்சியின் துப்புரவுப் பணியாளர்களிடம் ஒப்படைத்து முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மீண்டும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பட்டாசுக் கழிவுகளை வழக்கமான வீட்டு குப்பைகளுடன் கலக்காமலும், சாலைகள் மற்றும் பொது இடங்களில் கொட்டாமலும் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தூய்மையான, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சென்னையை உருவாக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/ மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

PR.No: 569 **Date: 09.11.2026**

The Greater Chennai Corporation had appealed to the public to segregate firecracker waste and hand it over to sanitary workers in separate bags. However, compliance with this request has been relatively poor.

So far, approximately 200 tonnes of firecracker waste have been cleared, and the Corporation expects to remove around 450 tonnes by tomorrow.

Furthermore, due to rainfall, firecracker waste has become stuck to the road surfaces, making its removal difficult. Nevertheless, Greater Chennai Corporation sanitation workers are continuously engaged in the cleanup operations, and efforts are being intensified to remove the firecracker waste accumulated on roads across the city.

To expedite the cleanup, an additional 600 sanitation personnel and 350 vehicles have been deployed across the city. 30000 nos.of Special bags have also been provided to sanitary workers for the separate collection of firecracker waste. The collected waste will be transported to a dedicated processing facility at Gummidipoondi for scientific and safe treatment.

The Corporation once again appeals to the public to cooperate by segregating firecracker waste and handing it over separately to sanitation workers, rather than mixing it with regular household waste or abandoning it in streets."

Issue By: Joint Director/ Public Relations Officer,

Greater Chennai Corporation.